அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சேரன் கவிதைகளில் பாடுபொருள்

Song Material in Cheran Poems

த.அமுல்பிரியா *(Ref.No.* ***11382/Ph.D.K8/Tamil/Full Time/October 2017/Confirm./Dt: 25.01.2021****)* *முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை உயராய்வு மையம் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த),தஞ்சாவூர்-613 007 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)*

T. AMULPRIYA (Ref.No. ***11382/Ph.D.K8/Tamil/Full Time/October 2017/Confirm./Dt: 25.01.2021****), Research Scholar, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)*

ORCiD: https://orcid.org/0009-0007-4825-3997

முனைவர் பொ.திராவிடமணி, *நெறியாளர். இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை உயராய்வு மையம். குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) தஞ்சாவூர்-613 007 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)*

Dr. P. THIRAVIDAMANI, Research Advisor — *Associate Professor, Department of Tamil,*

Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)

ORCiD: https://orcid.org/0009-0003-7374-5732

Abstract

The lyric is the core of the poem. It is this concept that constitutes the empirical expression or the experiential expression of others. In the history of Tamil literature, various themes have appeared from time to time, as appropriate for the time. In this changing environment, poet Cheran has composed poems based on war, land, love and lust in his collection of poems. His poems describe the scars of Eelam's thirty-year war. His poems mostly sing about the revolution and the revolutionary concept of love. His poems are internal and external and it can be said that Cheran has occupied a great place in singing the revolution of Bharati concept. War-related poems are featured in his poetry. In his poems, the poet has recorded the suffering of the people due to

the war, the atrocities that have happened to the people, how the mind and dignity of the women have been affected as an expression of the experience of the war.

Following this, love and romantic poems are also featured in his work. He has recorded the suffering of lovers who are unable to join despite being in love. The poet has described the life of lovers who lose their faces despite having inner feelings and lose their hands, feet and faces without breaking the bond. Along with this, he conveys messages related to lust in his poetry. In his land related poems, he has described the beauty of his land and the trees, plants, vines, birds, fields, intervening palms and bushes in a beautiful and fair manner. Along with that, his poems are featured to tell how the beauty of this beautiful land started to change color after the war.

Keywords: *Cruelty, cruel war, brutality, suffering, harshness,*

ஆய்வுச் சுருக்கம்

பாடுபொருள் என்பது கவிதையின் கருவாகும். இந்த கருதான் அனுபவ வெளியீடாகவோ அல்லது பிறர் அனுபவ வெளிப்பாடாகவோ அமைகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறுபட்ட பாடுபொருள்கள் காலந்தோறும், காலத்திற்குத் தகுந்தாற்போலத் தோன்றி வந்துள்ளன. இவ்வாறு மாறிவரும் சூழலில் கவிஞர் சேரன் தனது கவிதைத் தொகுப்பில் பாடுபொருளாக போர், நிலம், காதல், காமம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளார். இவரது கவிதைகள் ஈழத்தமிழரின் முப்பதாண்டு கால யுத்தத்தின் வடுக்களை விவரிக்கும் வகையில் கவிதைகள் அமைந்துள்ளன. இவரது கவிதைகள் பெரும்பாலும் புரட்சியையும், புரட்சிக் கருத்து காதலையும் பாடுவதாக அமைந்துள்ளன. இவரது கவிதைகள் அகம், புறம் சார்ந்ததாகவும், பாரதி கருத்து புரட்சியைப் பாடுவதில் சேரன் ஒரு சிறந்த இடத்தினைப் பிடித்துள்ளார் என்று கூறலாம். போர் சார்ந்த கவிதைகள் இவரது கவிதையில் அதிகம் இடம்பெற்றுள்ளன. இவரது கவிதைகளில் போரினால் மக்கள் படும் துயரம் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், பெண்களின் மனமும் மானமும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை போரின் அனுபவ வெளியீடாக கவிஞர் தனது கவிதையில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து காதல், காதல் சார்ந்த கவிதைகளும் இவரது படைப்பில் இடம்பெற்றுள்ளன. காதல் இருந்தும் காதலர்கள் சேர முடியாமல் தவிக்கும் தவிப்பைப் பதிவு செய்துள்ளார். உள்ளத்து உணர்வு இருந்தும் முகங்களை இழந்து காதலர்கள் கவுக்கை நெகிழாமல் தங்களது கை, கால், முகங்களை இழந்து வாழும் வாழ்க்கையைக் கூறியுள்ளார் கவிஞர். இதனோடு காமம் சார்ந்த செய்திகளையும் தனது கவிதைவழி புலப்படுத்துகிறார். நிலம் சார்ந்த

கவிதைகளில் தனது நிலத்தின் அழகினையும் அங்குள்ள மரம், செடி, கொடி, பறவைகள், வயல் வரப்புகள், தலையாட்டும் பனைகள், புதர்கள் ஆகியவற்றை அழகுற, நயம்படி எடுத்துரைத்துள்ளார். அதனோடு இவ்வாறு அழகுற அமைந்த நிலத்தில் அழகு போருக்குப் பின் எவ்வாறு நிறம் மாறத் தொடங்கியது என்று கூறும் வகையில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

கருவிச்சொற்கள்: குரூரம் , குரூர யுத்தம், குரூரவதை, துன்பம், கடுமை,

முன்னுரை

“வடிவங்கள் மாறிக் கொண்டே வந்தது போலவே கவிதையின் உள்ளடக்கமும் மாறிக் கொண்டே வந்துள்ளது என்பது தெளிவு” என்று விளக்குகிறார் து.மூர்த்தி. கவிதையழகுக்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தைவிட புதுக்கவிதையில் பாடுபொருளுக்கு தரப்பட்டது. சங்க காலத்தில் வீரம், காதல், கொடை போன்றவை பாடுபொருளாகவும், நீதி பக்தி இலக்கியத்தில் இறையுணர்வும், காப்பியக் காலத்தில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு பாடுபொருளாகவும் சிற்றிலக்கியத்தில் தனிப்பட்ட ஒருவர் பாடுபொருளாகவும் பாடப்பட்டு வந்துள்ளது. இக்காலத்தில் அனைத்து துறைகளையும் பாடுபொருளாக வைத்து பாடப்படுகின்றன.

சேரன் கவிதைகளில் பாடுபொருள்

சேரன் கவிதைகளில் பாடுபொருள் என்பது போர், காதல், காமம், நிலம், புலம்பெயர்வு என்ற பொருளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இவரது மொழியில் மரபின் தாக்கம் உண்டு. அதனோடு பொருளை வளைத்துக் காட்டும் ஆற்றல் கொண்டது. நுட்பங்களையும் சிக்கல்களையும் நுணுக்கமாகக் கையாண்டுள்ளார்.

இவரது கவிதைகள் அகம், புறம் சார்ந்ததாக அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் அகம், புறம் சார்ந்த நூல்கள் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் சேரனின் கவிதைகளும் சிறப்பிடம் பெறுகிறது. சங்க இலக்கியத்திற்குப் பிறகு அகம், புறம் சார்ந்த கவிதைகளைப் படைத்ததோடு போர் சார்ந்த கவிதைகளையும், அதனால் ஏற்பட்ட துன்பங்களையும் தனது படைப்பின் மூலம் பதிவு செய்துள்ளார்.

காதல்

காதல் என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை, உணர்வு, சேர்ந்து வாழ வேண்டும் என்பனவற்றை உடைய ஓர் ஆசை ஆகும். இயற்கை, தொழில், கலை, கருத்தியல்கள் எனப் பலவற்றை நோக்கியும் காதல் ஏற்படும் என்று

கூறப்பட்டாலும் அவற்றின் வேறுபட்டது. காதல் கற்பனை மட்டும் சார்ந்த ஒன்றாக இருப்பதனால்தான் இத்தகைய கவிதைகள் ஒருவகை வடிகாலாக அமைகின்றன.

தமிழ் இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குநூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, திருக்குறள் போன்ற நூல்களிலும் காதலைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றில் காதல் என்ற சொல் அகம் என்ற சொல்லால் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் தலைவன் தலைவி என்ற அடிப்படையில் இலக்கணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப (சுபாஷ் சந்திரபோஸ், 2016)

என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. தலைவன், தலைவியின் நோக்குவழி இசைவு ஏற்பட்ட பின் இருவருக்கும் களவொழுக்கத்தில் அளவிலா விருப்பம் உண்டாதல் இடைவிடாது காதல் உணர்வையே நினைத்துக் கொண்டிருத்தல், உடல் மெலிதல், உறக்கம் வாராது தவித்தல், நாணத்தை விட்டு நிறை அழிதல், பார்ப்பவை எல்லாம் தாம் விரும்பியனவையாகவே தெரிதல், தன் நிலை மறந்து பித்துப் பிடித்தல், மயக்க நிலை அடைதல் போன்றவை ஆகும். மேலும்,

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே. (புலியூர்க் கேசிகன், 2010)

மேற்கண்ட பாடலில், நானும் நீயும் இதற்கு முன் எந்த வழியிலும் அறிந்ததில்லை. செந்நிலத்தில் பெய்த மழை நீர் போல நம் நெஞ்சங்கள் ஒன்று கலந்தன என்னும் பொருள் தரும் குறுந்தொகைப் பாடல் தலைவனின் உள்ளக் கிடக்கையை அறிந்து கொள்ள முடிகிறது.

காதலின் தன்மைகளை வள்ளுவப் பெருந்தகை எவ்வாறு கூறியுள்ளார் என்பதை குறள்வழிக் காணலாம். காதல் என்பது ஒருவரை கற்பனை உலகிற்கும் இன்ப உலகிற்கும் கொண்டு செல்கிறது.

காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். (வ.உ.சிதம்பரம் பிள்ளை, 2008)

தாம் விரும்பிய (காதலித்த) பொருள் பாவையென்று தமது விருப்பத்தினைப் பகைவர் அறிந்து கொள்ளாதபடி அனுபவிக்க வல்லவனானால் அப்பகைவர் தன்னை வஞ்சிக்க என்னும் எண்ணம்

பழுதாகி விடும் என்று கூறுகிறார். காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை. பாரதியார் காதலைப் பாடுகையில்,

காதல் காதல் காதல்

காதல் போயிற் காதல் போயிற்

சாதல் சாதல் சாதல் *(சுப்புரெட்டியார், 1982)*

என்று கூறுகிறார். மாஞ்சோலையில் "காதல்" என்று தொடங்கிய குயிலின் பாட்டைக் குறிப்பிடுகிறார்.

கவிதை உருவாதற்கு அடிப்படையாக அமைவது காதல். அந்தக் காதலானது இன்றையச் சூழலில் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு என்று மாறிக் கொண்டே போகும் நிலை ஒரு நாள் மாறும் எனும் பதிலைத் தந்து, பிற்பாடு அவரே கவிதை உள்ளத்தில் ஊறும் வரைக் காதல் ஈரத்துடன் இருக்கும்தானே என்று கூறும் கவிஞர் இதனை,

ஒரு நாள் வரும்

அன்று,

காதலிலிருந்து காதலுக்கு

அதிலிருந்து மற்றொரு காதலுக்கு எனத்

திரிந்த நாள் அறும் என்கிறாய்

சேரா

கவிதை ஊறும் வரை

காதல் ஈரம் அல்லவா? *(சேரன், 2019)*

என்று குறிப்பிடுகிறார். மேலும், அதிக அன்பின் விளைவுதான் முத்தம். அதுவே அதிகமானால் சலிக்கும் என்று தன் கவிதையில் பதிவு செய்துள்ளார். அதனோடு அருகருகே நடக்கும்போதுகூட தூரமாகவும், அணைத்துக் கிடந்தாலும் ஒவ்வொரு அணைப்பிலும் ஒரு ஆண்டு கூடுவதாக உணர்கிறார்கள் தலைவனும் தலைவியும் என்பதை கவிஞர்,

அருகருகே நடந்தாலும்

ஒவ்வோரடியிலும் உன்னுடைய தூரம்

கூடுகிறது

அருகருகே கிடந்தாலும்

ஒவ்வொரு அணைப்பிலும்

ஒரு ஆண்டு சேர்கிறது

சேரா

நித்தியத்தில் சலிப்பது

முத்தம் *(சேரன், 2011)*

என்று கூறியுள்ளார்.

காதல் ஏக்கம்

தாய்வழிச் சமூக அமைப்பு கொண்ட பண்டை நாளிலும் இனக்குழு காலத்துக்கு முந்தைய வாழ்விலும் காதல் என்கிற கருத்தாக்கம் தனித்துவமான வாழ்வியல் அம்சமாக வளரவில்லை. உடைமைச் சமூக அமைப்பில் மேல், கீழ் மற்றும் ஆண், பெண் என்ற முரண்பாடுகளில் வளரத் தொடங்கியது என்று கூறலாம்.

சேரன் கவிதைகளில் காதல் சார்ந்த கவிதைகள் உடலும் உள்ளமும் சார்ந்ததாக அமைந்துள்ளன. இவரது கவிதையில் உடல் சார்ந்த அழுத்தம் காணப்படுகின்றது. இந்த அழுத்தத்தை கவிஞர் துல்லியமாக அவரது கவித்துவ மொழியில் வெளிப்படுத்தியுள்ளார். இவரது கவிதைகளில் தனிமையும், காதலர்களின் தவிப்பும், ஆற்றாமையும், ஏக்கமும் புலப்படுகின்றன. காதலர்கள் நிறைவான வாழ்க்கையை வாழவில்லை, வாழ்க்கை சீர்குலைந்து சின்னாப்பின்னமாக இருக்கும் போது காதல் மட்டும் எப்படி நிறைவடைந்து இருக்க முடியும். மனம் சார்ந்த உணர்வுகளும் உடல் சார்ந்த கவர்ச்சியும் கூடி உறவாடும் நேரத்தில் பிரிவு சார்ந்த துக்கம் நிகழ்ந்துள்ளது என்பதையும் காதலர்களின் உடலும் மனமும் இருக்கின்ற அளவிற்கு அவர்களது முகம் இல்லை என்பதை அவரது கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

முடவன் கொம்புத் தேனுக்கு
ஆசைப்பட்டது போல

என்பது பழமொழி. காதலர்கள் சேரமுடியாமல் தவிக்கும் தவிப்பை கவிஞர் சேரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

காமம் செப்பிக் கண்டதும் கேட்டதும்
. . . .
நேசிப்பு ஒன்றே நிறைவின் குறி

என்று கூறும் அவர் மேலும் சொல்கிறார்.

என் அறிவுச் சுடர் கொளுத்தி
என் இதயத்தைச் சுருக்கினாய்
. . . .
இதுவும் நிச்சயமற்றுப் போயிற்று. (சேரன், 2007)

மேற்கண்ட கவிதையில் காதல் இருந்தும் சேரமுடியாமல் பிரிந்து செல்லும் காதலர்கள் துடிக்கும் துடிப்பையும், ஆசையும் அறிவும் ஒன்றாய் மின்னும் உன் கண்களை இனிப் பார்க்க முடியாது. முகில் கூட்டம் கலைவது போல கலைந்து செல்கிறாய். இதுவும் நிச்சயமற்றது என்று கவிஞர் வருந்திக் கூறுகிறார்.

காமம்

காமம் என்பது கூடா ஒழுக்கத்தினால் கூடி மகிழ்தலே காமம். காமம் என்ற சொல்லைத் தரம் தாழ்ந்த சொல்லாகக் கருதும் நிலையில் வாழ்ந்து வருகிறோம். சங்க காலத்தில் காமம் என்ற சொல்லுக்கு அன்பு என்பதே பொருளாக இருந்தது. காமம் என்றால் நிறைவு என்பது பொருளாகும். அன்பின் நிறைவையே காமம் என்று பழந்தமிழர்கள் அழைத்தனர்.

கவிஞர் ''உச்சி'' என்ற கவிதையில் காமத்தின் வெளிப்பாடுகளைக் கூறியுள்ளார்.

அரை மனதுடன் காதலை முறித்து
''போய் வா பெண் மகனே'' எனத்
திருப்பி அனுப்பியவள்
இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு
திரும்பி வருகிறாள்
. . . .
இன்னும் முடியவில்லை இன்னும் விடியவில்லை
என்று போர்வையை வீசி எறிகிறாள்.
குளிருக்குத் தீயாகவும் தீக்குள் பனியாகவும்
இருக்கும் அவளுடைய உடம்புக்குள்
எப்போதும் அலையடித்துக் கொண்டிருக்கிறது. (சேரன், 2005)

காமம் என்பது ஓர் உணர்வு இதனை கவிஞர் எதார்த்த நடையில் அதன் உச்சத்தை காமத்தின் மென்மையையும் கவிதைவழி உணர்த்த முயன்றுள்ளார். இதனை வள்ளுவர்,

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார் (வ.உ.சிதம்பரம் பிள்ளை, 2008)

என்கிறார். காமம் மலரைவிட மென்மை உடையதாகும். அதன் உண்மை அறிந்து நல்ல பயனைப் பெறக் கூடியவர் சிலரே என்ற குறளின் கருத்திற்கு ஏற்றாற் போல சேரனின் உச்சி என்ற கவிதையில் காமத்தின் தன்மையையும், மென்மையையும் பற்றி வெளிப்படுத்தியுள்ளார். மேலும், தலைவன் தலைவி புணர்ச்சியை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை கீழ்க்காணும் கவிதைவழி அறியலாம்.

இரு விரல்களுக்கு நடுவே
இரு தொடைகளுக்கு நடுவே
இரு புருவங்களிடையே
அமர இடமமற்று அலையும் முத்தம் (சேரன், 2019)

என்று கூறியுள்ளார். தலைவன், தலைவி புணர்ச்சியின் போது உருவாகும் வெப்பத்தினால் உறைபனி கூட உருகும் நிலை அடைவதாகக் காதல் வரி என்ற கவிதையில் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். இதனை,

காது மடல்களின் பின்புறம்

இதழ்கள் தொட

மனம் இழைந்து

உடல் அவிழ்ந்து

பொறி கிளம்பித்

தீ பிறந்து

காட்டுத் தீயெனப் பற்றி எரிந்தோம்

தணல் பறந்து

தகித்த வெப்பத்தில்

வெளியே உறைபனியும் உருகிற்று. *(சேரன், 2007)*

என்கிறார்.

கூடுதல் உறுதல் சொல்லிய நுகர்ச்சி

என்று கூறுகிறார் தொல்காப்பியர், தலைவன் தலைவி கூடி மகிழ்தலை மேற்கண்ட நூற்பாவழியும் கவிதை வழியும் அறியமுடிகிறது.

நிலம்

சேரன் நிலம் பற்றிய கவிதைகளில் தன் நிலத்தின் மீதான தாகம் புலப்படுகிறது. தமிழர்களிடமிருந்து நிலம் சூரையாடப்படுகிறது என்பதை நிலக்காட்சிகளாக வெளிப்படுத்துகிறார். மேலும், போருக்கு முன்பு நிலம் எப்படி இருந்தது என்பதையும் போருக்குப் பின்பு நிலம் எவ்வாறு மாறி உள்ளது என்பதையும் கீழ்க்காணும் கவிதைவழி அறியலாம்.

நூறு நூறாயிரம் தோள்களின்மீது

என்று "எனது நிலம்" என்ற கவிதையில் நிலத்தின் சிறப்பினை நூறு நூறு ஆண்டுகளுக்குச் சொல்லுவேன் என்று கூறியுள்ளார்.

உனது நிலம்

இதோ பரந்து கிடந்தது

தலையை விரிக்கும் பனைகளை

. . . .

தானிய மணிகளை *(சேரன், 2007)*

மேற்கண்ட கவிதைகளில் மரங்கள், காட்டுப்பூக்கள், தானியங்கள், வயல்கள், நிலவு, காற்று ஆகியவை சேரன் நிலத்தில் அழகியல் தன்மையோடு காட்சியளித்தன. இவ்வாறு காட்சியளித்த நிலமானது போருக்குப் பின்பு நிறமாறத் தொடங்கின என்பதை போர் சார்ந்த கவிதைகள்வழி விளக்கப்படுகின்றன.

போர்

பேரிலக்கியங்கள் முளைத்த மண்ணில் பிற்பாடு போர் இலக்கியங்களே முளைத்துள்ளன. போரினால் கிழித்தெறியப்பட்ட உடலும், நிலமும், வாழ்விலும் பல கவிதைகளில் சாட்சியாகப் பதிவாகி உள்ளன. ஈழத்துப் போர் மிகவும் கொடுமையாக இருந்தால்தான் அது வரலாறு உடையதாக இருக்கின்றது. போர் பற்றிய செய்திகள்தான் இவரது கவிதைகளில் பெரும்பாலும் பேசுகின்றன. ஒர் இனத்தை அழிக்கும் இனப்போர் அந்நாட்டு அரசால் நிகழ்த்தப்பெற்றது என்பதை,

நெல் விதைப்பதற்குப் பதிலாகத்

துப்பாக்கி ரவைகளையே விதைக்கும் (சேரன், 2007)

என்று கூறுகிறார். அதாவது நெல் விதைகளை விதைக்காமல், துப்பாக்கி ரவைகளை விதைத்து அங்குள்ள மக்களைக் கொன்று குவிக்கும் அவலம் அந்நாட்டு அரசால் நிகழ்த்தப்பட்டது என்பதை கவிஞர் தனது படைப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

“எரிந்து கொண்டிருக்கும் நேரம்” என்ற கவிதையில்,

மனிதனைத்

துப்பாக்கி முனையில்

நடத்திச் சென்று

புதைக்குழி விளிம்பில்

வைத்துச் சுட்டு

புறங்காலால்

மண்ணைத் தள்ளி (சேரன், 2007)

மேற்கண்ட கவிதையில் இனப்படுகொலையை அறியமுடிகிறது. துப்பாக்கி முனையில் மனிதர்களை அழைத்து வந்து புதைக்குழி விளிம்பில் சுட்டு புறங்காலால் மண்ணைத் தள்ளிவிட்டுப் போரினால் இறந்தவர்கள் என்று நியாயம் கூறுகிறார்கள் என்பதை வினவுகிறார். புதைக்குழி என்ற கவிதையில் தன்னுடைய புதைக்குழி தானே வெட்டும் அவலம் நிகழ்ந்துள்ளது என்பதை,

தன்னுடைய புதைகுழியைத்

தானே வெட்டும் அவலம்

நேர்ந்த போது அவன் என்ன உணர்ந்திருப்பான்

என்பது வார்த்தைக்குள் அகப்படாத

குரூரம் (சேரன், 2007)

என்று கூறுகிறார். போர் என்று வந்துவிட்டால் மக்களின் வாழ்வு எவ்வாறு பாதிக்கப்படுகின்றது. அவர்களின் வாழ்க்கையையும், உடல் உறுப்புகளையும் இழந்து பெரும் அவலத்திற்கு உள்ளாகின்றார்கள் என்பதையும் பசியும் பட்டினியுமாக அவர்களின் கண்குழிக்குள் கண்ணீரும், இரத்தமும் புதைந்து கிடக்கின்றன என்பதையும், புதைக்குழியை நோக்கி எலும்புக் கூடுகளாக அணிவகுப்பு கொள்கின்றன என்பதை "எலும்புக் கூடுகளின் ஊர்வலம்" என்ற கவிதையில்,

எலும்பு கூடுகள் ஊர்வலமாகப் போயின

ஆண் எலும்புக் கூடுகள் (சேரன், 2007)

என்று கூறியுள்ளார்.

முடிவுரை

சேரன் தனது கவிதைத் தொகுப்பில் பாடுபொருளாக போர், காதல், நிலம், காமம் போன்றவை சிறந்த பாடுபொருளாகத் தந்து சிறப்பித்துள்ளார் என்றாலும் போர் பற்றிய செய்திகளை விரிவாக விளக்கப்பட்டுள்ளன. காதல், காதல் ஏக்கம் போன்ற செய்திகளை கவிதைவழி விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. நிலம் சார்ந்த செய்திகளை நிலத்தின் தன்மைக்கு ஏற்றாற்போல விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

துணைநூற் பட்டியல்

சிதம்பரம் பிள்ளை, வ.உ. *திருக்குறள்.* வ.உ.சி. நூலகம், சென்னை, 2008.

சுப்புரெட்டியார். *குயில் பாட்டு.* பாரி நிலையம், சென்னை, 1982.

சுபாஷ் சந்திரபோஸ், ச. *தொல்காப்பியம்.* இயல் வெளியீடு, தஞ்சாவூர், 2016.

சேரன். *காடாற்று.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோயில், 2011.

சேரன். *திணை மயக்கம் அல்லது நெஞ்சொடு கிளர்த்தல்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோயில், 2019.

சேரன். *நீ இப்போது இறங்கும் ஆறு.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோயில், 2001.

சேரன். *மீண்டும் கடலுக்குள்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோயில், 2004.

புலியூர்க் கேசிகன். *குறுந்தொகை.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2010.

References

Chidambaram Pillai, V.U. Thirukkural. V.U.C. Noolagam, Chennai, 2008.

Subbureddiyar. Kuyil Pattu. Pari Nilayam, Chennai, 1982.

Subash Chandrabose, C. Tholkappiyam. Iyal Veliyeedu, Thanjavur, 2016.

Seran. Kattratru. Kalachuvadu Publications, Nagarcoil, 2011.

Seran. Thinai Mayakkam allathu Nenjodu Kilathal. Kalachuvadu Publications, Nagarcoil, 2019.

Seran. Nee Ippothu Irangum Aaru. Kalachuvadu Publications, Nagarcoil, 2001.

Seran. Meendum Kadalukkul. Kalachuvadu Publications, Nagarcoil, 2004.

Puliyoor Kesikan. Kurunthogai. Sri Senbaga Pathippagam, Chennai, 2010.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com